நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மழைக்காலத்தில் தோட்டப்பயிர்களைப் பாதுகாப்பது எப்படி?**

First Published : 10 Nov 2011 12:30:48 AM IST



விழுப்புரம்: மழைக்காலங்களில் தோட்டப்பயிர்களை பாதுகாக்க விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் என். பன்னீர்செல்வம் விளக்கம் அளித்துள்ளார்.

தொடர்ந்து பெய்து வரும் மழையால் வாழை, காய்கறி பயிர்கள் மற்றும் மலர் செடிகள் சாய்ந்து பாதிப்படைய வாய்ப்புள்ளது. அவற்றைப் பாதுகாக்கும் முறைகள் வருமாறு:

வாழை: வயலில் தேங்கியுள்ள மழைநீரை முழுவதுமாக வடிக்க முதலில் வயலில் கிடங்குகளை ஆழப்படுத்த வேண்டும். மண்ணில் ஒரளவு ஈரம் உலர்ந்த பின்னர் மேல்மண்ணை மேலாக கொத்திவிடவும்.

மழையினால் ஏற்பட்ட சத்து பற்றாக்குறையை போக்க, ஒரு ஏக்கருக்கு 100 லிட்டர் நீரில் 1 கிலோ பொட்டாசியம் நைட்ரேட் உரத்தை கலந்து பின்னர் டேங்க் ஒன்றுக்கு 5 மி.லி. வீதம் ஒட்டும் திரவம் கலந்து மழை இல்லாதபோது வாழை இலைமேல் தெளிக்கவும்.

பொட்டாசியம் நைட்ரேட் உரம் கிடைக்காத இடங்களில் 5 கிலோ யூரியா, 3 கிலோ டி.ஏ.பி மற்றும் 1 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களை 10 லிட்டர் நீரில் கலந்து, இந்த கரைசலை 100 லிட்டர் வருமாறு செய்து, டேங்க் ஒன்றுக்கு 5 மி.லி. வீதம் ஒட்டும் திரவம் கலந்து ஒரு ஏக்கரில் உள்ள வாழை இலைமேல் மழை இல்லாத நேரத்தில் தெளிக்கலாம்.

இலைப்புள்ளி நோயின் தாக்குதலால் மகசூல் குறைய வாய்ப்புள்ள இடங்களில் புரோப்பிகோனோசோல் மருந்து 1 மி.லிட்டரை, 1 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். பின்னர் 20 நாள்கள் கழித்து கார்பன்டாசிம் மற்றும் காலிக்சின் மருந்துகளை தலா 1 கிராம், 1 லிட்டர் நீர் கலந்து தெளிக்கலாம்.

வாழைக்கு காற்றினால் ஏற்படும் சேதாரத்தை தவிர்க்க சவுக்கு கொம்புகள் கொண்டு முட்டுக்கொடுக்கவும்.

காய்கறி தோட்டம்: வயலில் உள்ள மழைநீரை முழுவதுமாக வடிக்க வேண்டும். மண் ஓரளவு உலர்ந்த பிறகு மேல்மண்ணை காற்றோட்டமாக நன்றாக கொத்திவிடவும்.

வாய்ப்புள்ள இடங்களில் சிறுகுச்சிகள் அல்லது கொம்புகள் கொண்டு செடி, கொடிகள் சாயாதவாறு கட்டிவிடலாம்.

மழையினால் ஏற்பட்ட சத்து பற்றாக்குறையை போக்க 200 லிட்டர் நீரில் 1000 கிராம் யூரியா, 1000 கிராம் மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களை கலந்து, பின்னர் இதனுடன் டேங்க் ஒன்றுக்கு 5 மி.லி. வீதம் ஒட்டும் திரவம் கலந்து ஒரு ஏக்கர் செடிகளுக்கு தெளிக்கலாம்.

எலும்புத்தூள் 90 கிலோவை ஒரு ஏக்கரில் உள்ள செடிகளுக்கு இட்டு காய்கறி பயிர்களுக்கு மணிசத்து கிடைக்கச் செய்ய வேண்டும். மக்னீசியம் சல்பேட் 200 கிராம் உரத்தை 200 லிட்டர் நீரில் கலந்து ஒரு ஏக்கர் செடிகளின் மீது தெளித்து செடிகளுக்கு மக்னீசியம் சத்து கிடைக்க செய்யவும். காய்கறிகளுக்கான நுண்ணுரத்தை 200 லிட்டர் நீருக்கு 1 கிலோ என்ற அளவில் கலந்து பின்னர் இத்துடன் டேங்க் ஒன்றுக்கு 5 மி.லி. வீதம் ஒட்டும் திரவம் கலந்து ஒரு மாத இடைவெளியில் செடிகளின் மேல் தெளிக்க வேண்டும். செடி அழுகலை தவிர்க்க காப்பர் ஹைடிராக்சைடு 2.5 கிராம், 1 லிட்டர் வீதம் கலந்து பின்னர் இதனுடன் ஒட்டும் திரவம் டேங்க் ஒன்றுக்கு 5 மி.லி. வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

ரோஜா: கால்சியம் நைட்ரேட் 1.5 கிலோ, பொட்டாசியம் நைட்ரேட் 0.8 கிலோ, மோனோ பொட்டாசியம் பாஸ்பேட் 1 கிலோ, சல்பேட் ஆப் பொட்டாஷ் 0.5 கிலோ, மக்கனீசியம் சல்பேட் 0.4 கிலோ, போராக்ஸ் 0.2 கிலோ ஆகியவற்றை 8 லிட்டர் நீரில் கலந்து ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை மேலாக மண்ணில் ஊற்றவும்.

மல்லிகை: சத்துப் பற்றாக்குறையை போக்க செடி ஒன்றுக்கு 65 கிராம் யூரியா, 375 கிராம் சூப்பர் பாஸ்பேட், 100 கிராம் பொட்டாஷ் உரங்களை இடவும். செடிகள் வெளுத்து, சிறுத்து மஞ்சள் நிறமாக தென்பட்டால் இரும்பு சல்பேட் பற்றாக்குறையை போக்க ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் வீதம், இரும்பு சல்பேட் நுண்ணுரம் கலந்து ஒரு மாத இடைவெளியில் செடிகளின் மீது தெளிக்கவும்.

பொதுவாக மழைக்காலத்தில் மலர் பயிர்களில் தோன்றும் வேரழுகல் நோயினை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு 2.5 கிராம் என்ற அளவில் காப்பர் ஹைடிராக்சைடு மருந்து கலந்து செடிகளின் வேரை சுற்றிலும் ஊற்றவும்.

கனகாம்பரம்: அசோஸ்பைரில்லம் 200 மி.கி. வீதம் ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் இட்டு பின்னர் 24 மணி நேரம் கழித்து 13 கிராம் யூரியா உரத்தினை 8 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். பின்னர் கார்போ பியூரான் மருந்தினை சதுர மீட்டருக்கு 100 மி.கி. என்ற அளவில் இடவும். வாடல் நோய் தாக்குதலை தவிர்க்க எமிசான் 2 கிராம் அல்லது கார்பன்டாசிம் 1 கிராம், 1 லிட்டர் வீதம் கலந்து செடியின் வேர்பாகத்தை சுற்றி ஊற்ற வேண்டும் என தோட்டக்கலை துணை இயக்குநர் என். பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

**மலர்ச் சாகுபடி**


மலர் பயிர்களை பொறுத்தவரை வயலில் உள்ள மழைநீரை முழுவதுமாக வடிக்க வேண்டும். மண் ஒரளவு உலர்ந்த பிறகு மேல்மண்ணை காற்றோட்டமாக நன்கு கொத்தி விடவும்.

வாய்ப்புள்ள இடங்களில் சிறுகுச்சிகள் கொண்டு செடிகள் சாயாதவாறு கட்டிவிடவும். மலர் பயிர்களில் மழையினால் ஏற்பட்ட சத்து பற்றாக்குறையை போக்க சாமந்தி பயிருக்கு கால்சியம் நைட்ரேட் 3 கிராம், பொட்டாசியம் நைட்ரேட் 1.5 கிராம், மோனோ பொட்டாசியம் பாஸ்பேட் 3 கிராம், சல்பேட் ஆப் பொட்டாஷ் 1 கிராம், மக்னீசியம் சல்பேட் 1 கிராம், போரக்ஸ் 1 கிராம் வீதம் 8 லிட்டர் நீரில் கலந்த கரைசலை ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் வாரம் இருமுறை மேலாக மண்ணில் ஊற்றவும்.

மழை நீர் வடிந்த பிறகு முதல்போக சாமந்தி பயிராக இருந்தால் பரிந்துரை அளவுக்கும் கீழாக அறுத்து மறுதாம்பு பயிராக அனுமதித்து மகசூல் பெற்று பயனடையலாம்.

**வாழையில் போரான் சத்துப் பற்றாக்குறை**

First Published : 10 Nov 2011 12:00:00 AM IST



திண்டிவனம் : விழுப்புரம் மாவட்டத்தில் தற்போது வாழையில் போரான் சத்து பற்றைக்குறை அதிக அளவில் காணப்படுகிறது. இதைக் கண்டறிந்து சத்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

அறிகுறிகள்: குலை தள்ளும் நேரத்தில் வளரும் இலைகளின் நரம்புப்பகுதிகள் கோடுகள்போல் இளம்பச்சை நிறத்திலும் நரம்புகளுக்கு இடைப்பட்ட பகுதிகள் நீண்ட பட்டைகளாகவும் தெரியும். காய் முதிர்ச்சி அடையும் பருவத்தில் வெடித்து காணப்படும்.

ஏன் ஏற்படுகிறது? மண்ணில் போரான் சத்து குறைந்து இருந்தால் போரான் சத்து பற்றாக்குறை ஏற்படும். அதிக மழை பெய்யும் பகுதிகளிலும் அதிக வெப்பநிலை உள்ள பகுதிகளிலும் (33 டிகிரி செல்சியஸý்க்கு மேல்) போரான் சத்து குறைபாடு ஏற்படும்.

எப்போது ஏற்படுகிறது? போரான் சத்து பற்றாக்குறை குலை தள்ளும் பருவத்தில் ஏற்படலாம். நடவு செய்த 3 மாதத்துக்கு பிறகு அறிகுறிகள் தெரியும். காய் முதிர்ச்சிடையும் பருவத்தில் பாதிப்பு ஏற்படும்.

என்ன பாதிப்பு? காய்கள் வெடித்து வெளிரிய கோடு போல் காணப்படும்.

எவ்வாறு நிவர்த்தி செய்வது? காய் பிடிப்பதற்கு போரான் சத்து முக்கியமானது. இதற்கு அடி உரமாக ஒரு ஏக்கருக்கு 10 கிலோ போராக்ஸ் உரம் இட வேண்டும். வாழை பயிரிடும் விவசாயிகள் மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி போரான் சத்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து வாழையில் அதிக மகசூல் பெற வேண்டும் என்று திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நா. ராமமூர்த்தி, உதவி பேராசிரியர் முனைவர் சீனி. அன்புமணி மற்றும் முதுநிலை ஆராய்ச்சியாளர் க. முத்துலட்சுமி ஆகியோர் தெரிவித்துள்ளனர். போரான் சத்து குறைவால் பாதிக்கப்பட்டுள்ள வாழைக் குலைகள்.

**பயிர் பாதுகாப்பு இடுபொருள் வழங்கும் விழா**

First Published : 09 Nov 2011 11:12:13 AM IST

கிருஷ்ணகிரி, நவ. 8: நபார்டு வங்கியின் கிராம முன்னேற்றத் திட்டத்தின் கீழ் பயிர் பாதுகாப்பு இடுபொருள் வழங்கும் விழா பெரியஅலங்கிரி கிராமத்தில் நடைபெற்றது.

இதுகுறித்து டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தர்ராஜ் செவ்வாய்க்கிழமை அளித்த செய்தி: டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தின் சார்பில், நபார்டு வங்கியின் கிராம முன்னேற்றத் திட்டத்தின் கீழ் உழவர் மன்றங்களுக்கு பயிர் பாதுகாப்பு இடுபொருள் வழங்கும் விழா நடைபெற்றது. பெரியஆலங்கிரி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் ஜி.சிதம்பரநாதன் தலைமை வகித்து, இடுபொருள்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண் அறிவியல் மையத்தின் நோக்கம், குறிக்கோள் மற்றும் உழவர் மன்றங்களுக்கு வழங்கப்படும் விவசாயப் பயிர் பாதுகாப்பு உபகரணங்களின் பயன், விதை நடவுக்கு முன் விதை நேர்த்தி செய்ய வேண்டியதன் அவசியம், அதனால் ஏற்படும் பயன்கள், துவரைக்கு டிஏபி தெளித்தலின் அவசியம், விவசாயிகளுக்கு அரசால் வழங்கப்படும் மானியங்கள் போன்றவை குறித்து விளக்கப்பட்டன.

உதவிப் பேராசிரியர்கள் கே.எஸ்.விஜயசெல்வராஜ், எம்.தண்டபாணி, வேளாண் அலுவலர் தமிழ்வேந்தன்,தொழில்நுட்ப வல்லுநர் ரமேஷ்பாபு உள்பட பலர் பங்கேற்றனர்.

**கோவில்பட்டியில் வேளாண்மை கணக்கெடுப்பு பயிற்சி**

First Published : 09 Nov 2011 01:27:00 PM IST

கோவில்பட்டி, நவ. 8: கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேளாண்மை கணக்கெடுப்பு பயிற்சி வகுப்புகள் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

வட்டாட்சியர் காளிமுத்து தலைமை வகித்தார். கோவில்பட்டி வட்டாரப் புள்ளியியல் ஆய்வாளர் நவநீதகிருஷ்ணன் பயிற்சியளித்தார்.

வேளாண்மை கணக்கெடுப்பு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.

9-வது வேளாண்மை கணக்கெடுப்பு பசலி 1420 ஆண்டை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படுகிறது.

இதன் மூலம் புதிய வேளாண்மை வளர்ச்சி திட்டங்களை வகுப்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும், நில உபயோகம், நீர்ப்பாசனம் உள்ளிட்ட விவரங்கள் சேகரிக்கின்றனர்.

இப் பணியை கிராம அலுவலர்கள் மேற்கொள்கிறார்கள்.

**விதைகளை கவனத்துடன் வாங்குங்கள்!**

First Published : 09 Nov 2011 09:23:18 AM IST

கோவை, நவ. 8: விதைப்புக்கு வாங்கும் விதைகளை விவசாயிகள் கவனத்துடன் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று, விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை தெரிவித்துள்ளது.

÷இதுதொடர்பாக, அதன் இயக்குநர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

÷விதைகளை விதை விற்பனை உரிமம் பெற்ற கடைகளில் வாங்கவும். திறந்து வைக்கப்பட்டுள்ள பைகளில் இருந்து விதைகளை வாங்க வேண்டாம். விதைகள் வாங்கும் முன், சான்று அட்டை, விபர அட்டையில் உள்ள விவரங்களை சரிபார்க்க வேண்டும்.

÷விபர அட்டையில் காலாவதி தேதி, விதை, ரகம் போன்ற விவரங்களை சரிபார்க்கவும். விதைத்தரம் குறித்த அறிக்கைகள் உள்ளனவா என்றும் பார்க்க வேண்டும்.

÷வெளிமாநில சான்று பெற்ற விதைகளாக இருந்தால், படிவம்-2 உள்ளதா என்று பார்க்க வேண்டும். விதைகளை வாங்கும்போது விற்பனைப் பட்டியல் தவறாமல் பெற வேண்டும். விற்பனைப் பட்டியல் தேதி, வாங்கிய விதையின் பெயர், வாங்கிய விதையின் அளவு, விலை, குவியல் எண், காலாவதி தேதி போன்ற விபரங்கள் குறிப்பிட்டு விதை வாங்குபவர் கையொப்பமிட வேண்டும்.

÷விதைப்புக்குப் பயன்படுத்தும் விதைகளில் ஏதாவது பிரச்னை இருந்தால், தங்களது பகுதியில் உள்ள விதை ஆய்வு துணை இயக்குநர் (அல்லது) விதை ஆய்வாளரிடம் எழுத்து மூலமாக புகார் தர வேண்டும்.

÷மேலும் விவரங்களுக்கு, தங்கள் பகுதியில் உள்ள விதைச்சான்றுத் துறை அலுவலகங்கப்ளைத் தொடர்பு கொள்ளலாம். அல்லது இயக்குநர், விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு

இயக்ககம், 1424-எ, தடாகம் சாலை, ஜி.சி.டி. அஞ்சல், கோவை - 641013 என்ற முகவரியைத் தொடர்பு கொள்ளலாம். ÷தொலைபேசி 0422-243 2984. பேக்ஸ் 0422-245 7554.

**உதகையில் தொடங்கியது உறைபனிக் காலம்**

First Published : 10 Nov 2011 03:26:56 AM IST



உதகை, அரசினர் தாவரவியல் பூங்காவில் புதன்கிழமை அதிகாலையில் கொட்டியிருந்த உறைபனி. (உள்படம்) புல்லில் படிந்திருக்கும் பனித்துளி.

உதகை, நவ. 9: உதகை நகரில் வழக்கமாக நவம்பர் மாதத்தில் தொடங்கும் உறைபனிக் காலம் தொடங்கிவிட்டது.

உதகை நகரில் புதன்கிழமை காலை குறைந்தபட்ச வெப்பநிலை 7 டிகிரி சென்டிகிரேடாக இருந்தது. நகரின் அனைத்துப் பகுதிகளிலும் புதன்கிழமை காலை, வெள்ளைப்போர்வை போர்த்தியது போலிருந்த உறைபனியைக் காண சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் திரண்டனர்.

உதகையில் வழக்கமாக கோடைக்காலத்தை அடுத்து ஜூன், ஜூலை மாதங்களில் தென்மேற்கு பருவமழையும், அதைத் தொடர்ந்து வடகிழக்கு பருவமழையின் தாக்கமும் இருக்கும். அதையடுத்து நவம்பர் மாதத்திலிருந்து ஜனவரி மாதம் வரை பனிக்காலமாகும்.

பருவமழைக் காலங்களில் மழைப்பொழிவு எந்த அளவுக்கு இருக்கிறதோ அதைப் பொருத்தே பனிக்காலமும் இருக்கும். மழை அதிகமாகப் பெய்திருந்தால் பனிக்காலமும் கடுமையாக இருக்கும். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை பகலில் நல்ல வெயில் இருந்ததால், இரவில் பனி விழும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அதுபோலவே மாலையிலிருந்து கடுமையான குளிர் நிலவியது. எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நள்ளிரவில் உறைபனியும் கொட்டத் தொடங்கியது.

இதனால் புதன்கிழமை காலை, நகரிலுள்ள அனைத்து புல்வெளிப் பகுதிகளிலும் உறைபனி கொட்டியிருந்தது. உதகையில் அரசினர் தாவரவியல் பூங்கா, குதிரைப் பந்தய மைதானம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட திறந்தவெளி விளையாட்டு மைதானம், காந்தல் விளையாட்டு

மைதானம், படகு இல்லத்தை சுற்றியுள்ள புல்வெளிப் பகுதிகளில் வெள்ளைப் போர்வை போர்த்தியது போல உறைபனி கொட்டியிருந்தது.

பனிக்காலம் தொடங்குவதை அறிவிக்கும் வகையில் முதன்முதலில் கொட்டும் உறைபனி "திருட்டுப்பனி' என்று அழைக்கப்படும். அதைத் தொடர்ந்து ஒருசில நாட்களுக்கு லேசான குளிர் இருக்கும். அதன் பின்னரே கடுமையான உறைபனி பொழியத் தொடங்கும். இது உதகையில் ஆண்டுதோறும் நிகழும் நிகழ்வாகும்.

அதுபோலவே, புதன்கிழமை காலையில் உறைபனி கொட்டியிருந்தது. இனிவரும் சில நாட்களுக்கு உறைபனியின் தாக்கம் நகரில் அதிகஅளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உதகை நகரில் கொட்டியிருந்த உறைபனியைக் காண புதன்கிழமை காலையில் அரசினர் தாவரவியல் பூங்காவுக்கு வந்திருந்த சுற்றுலாப் பயணிகள், கடும் குளிரைத் தாக்குப்பிடிக்க ஆங்காங்கே சாலையோரங்களில் தீ மூட்டி உடலை சூடேற்றிக் கொண்டனர். நள்ளிரவில் நிலவிய கடும் குளிர் காரணமாக, வாடகை வாகன ஓட்டுநர்களும் ஆங்காங்கே தீ மூட்டி குளிர்காய்ந்ததைக் காண முடிந்தது.

தினமலர்
உண்மையின் உரைகல்

**பயிர் பாதுகாப்பு கருவிகள் பயிற்சி விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 10,2011,00:21 IST

கருத்தை பதிவு செய்ய

சிதம்பரம் : சிதம்பரம் பகுதி விவசாயிகளுக்கு வரும் 14ம் தேதி முதல் 23ம் தேதி வரை பயிர் பாதுகாப்பு கருவிகள் குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. சிதம்பரம் வேளாண் மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் குணசேகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதி விவசாயிகளுக்கான பயிர் பாதுகாப்பு கருவிகள் தேர்வு, செயல்பாடு மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சி வரும் 14ம் தேதி முதல் 23ம் தேதி வரை அளிக்கப்படுகிறது. பயிற்சியில் சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஊரக வேலை வாய்ப்பற்ற விவசாயம் செய்யும் இளைஞர்கள் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகளுக்கு சொந்தமாக இயந்திரங்கள், வேளாண் கருவிகள் இருக்க வேண்டும். வயது வரம்பு 18 முதல் 40க்குள் இருக்க வேண்டும். வரும் 11ம் தேதிக்குள் சிதம்பரம் பள்ளிப்படை பூதகேணியில் உள்ள வேளாண் பொறியியல் அலுவலக உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். பயிற்சிக்கு 20 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவதால் முன்பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**கருவேப்பிலை பயிர் செய்ய விவசாயிகளுக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 10,2011,00:21 IST

கருத்தை பதிவு செய்ய

விருத்தாசலம் : கருவேப்பிலை பயிர் செய்வதற்கு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும் என தோட்டக்கலைத் துறை அறிவித்துள்ளது. விருத்தாசலம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

மாவட்டத்தில் கறிவேப்பிலை போதிய அளவு சாகுபடி செய்யவில்லை. நமது தேவைக்கான கருவேப்பிலை வெளி மாவட்டங்களில் இருந்தே கொண்டுவரப்படுகிறது. கருவேப்பிலை சாகுபடி செய்ய ஊக்குவிக்கும் வகையில் தோட்டக்கலைத் துறை மூலம் மானியம் வழங்கப்படுகிறது. கருவேப்பிலை ஆண்டு வருமானத்தை ஈட்டிதரும் பயிராகும். ஒரு முறை பயிர்செய்தால் பல ஆண்டுகள் பராமரித்து வருமானம் பெறலாம். அதிக அளவில் நோய் மற்றும் பூச்சிதாக்குதல் இல்லாத பயிராகும். மேலும் அதிக கூலியாட்கள் தேவைப்படாமல் பராமரிப்பு செய்யும் பயிராகும். எனவே விவசாயிகள் கருவேப்பிலையை பயிர் செய்து நல்ல லாபம் அடையுமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

**பயறு வகையில் அதிக மகசூல் பெற தொழில் நுட்பம் பயன்படுத்த அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 10,2011,02:52 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, பயறு வகை பயிர்களில் அதிக மகசூல் பெற்று பயன்பெறலாம்' என, நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் செல்வி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல் வட்டாரத்தில், பரவலாக நல்ல மழை பெய்துள்ளதால், விவசாயிகள் துவரை, உளுந்து போன்ற பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்ய இது சரியான தருணம். பயறு வகைப்பயிர்களின் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில், நாமக்கல் வட்டாரததில் வேளாண் துறை மூலம் காதப்பள்ளி, கீரம்பூர், அணியார் ஆகிய கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி அதிக மகசூல் எடுக்கும் வகையில் கிராம கூட்டங்கள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.மேலும், துவரை சாகுபடியை விவசாயிகளிடம் ஊக்குவிக்கும் பொருட்டு நாமக்கல் வட்டாரத்தில், 36 செயல் விளக்கத் திடல்கள் அமைத்திட விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயறு வகைப்பயிர்கள் சாகுபடிக்குநிலத்தை, 2-3 முறை நன்கு உழவு செய்ய வேண்டும். ஏக்கருக்கு, 8 கிலோ தரமான சான்று பெற்ற விதை ரகத்தை தேர்வு செய்தல் வேண்டும். விதைப்பிற்கு, 24 மணி நேரத்துக்கு முன், ஒரு கிலோ விதைக்கு, 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் 10 கிராம் சூடோமோனஸ் ஆகியவற்றுடன் நன்கு கலந்து விதை நேர்த்தி செய்வது அவசியம். இது விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த உதவும்.மண்ணில் உள்ள தழை மற்றும் மணிச்சத்துக்களை பயிர்களுக்கு எடுத்துக்கொடுக்கும் பொருட்டு வகையில், 200 கிராம்

ரைசோபியம் மற்றும் 200 கிராம் பாஸ்போபாக்டீரியா ஆகிய உயிர் உரங்களை ஆறிய அரிசிக்கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.விதைத்த, 3 நாட்களுக்குள் பெண்டிமெத்திலின் என்ற களைக்கொல்லியை ஏக்கர் ஒன்றுக்கு ஒரு லிட்டர் என்ற விதத்தில் தெளிக்க வேண்டும். பின், 35 நாட்கள் கழித்து ஒர கைக்களை எடுத்தல் வேண்டும். விதைப்பிற்கு முன் அடியுரமாக, 5 மெட்ரிக் கடன் தொழுஉரம், 50 கிலோ சூப்பர்பாஸ்பேட் மற்றும் 50 கிலோ ஜிப்சம் ஆகியவை இடவேண்டும். விதைப்பு செய்த பின், ஏக்கருக்கு 2 கிலோ நுண்ணூட்டச் சத்தினை மணலுடன் கலந்து தூவ வேண்டும்.விதைத்து, 30 நாட்கள் கழித்து, பூ பூக்கும் தருணத்தில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு, 20 கிராம் டிஏபி வீதம் கலந்து தெளிக்க வேண்டும். மீண்டும் 15 நாட்கள் கழித்து, ஒரு முறை டிஏபி தெளிக்க வேண்டும். அதனால், பூ உதிர்வது தடுக்கப்பட்டு அதிக பூக்கள் மற்றும் பிஞ்சுகள் பிடிக்க ஏதுவாகும். இந்த தொழில் நுட்பங்களை பயன்படுத்தி நல்ல மகசூல் பெறலாம்.

**6 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 10,2011,01:10 IST

கருத்தை பதிவு செய்ய

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் 6 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வசதி செய்யப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் நடப்பு காரீப் பருவம் 2011-12ம் ஆண்டிற்கு கடந்த பருவத்தில் நெல் கொள்முதல் செய்யப்பட்ட அதே இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் சேரன்மகாதேவி, அம்பை, ரவணசமுத்திரம், வடக்கு அரியநாயகிபுரம், கல்லிடைக்குறிச்சி, முன்னீர்பள்ளம் பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்களில் நெல்லை விவசாயிகள் விற்பனை செய்யலாம் என்று கலெக்டர் செல்வராஜ் தெரிவித்தார்.

**பழுதடைந்த வேளாண்மைக் கட்டடம்: மழையில் நனையும் உரம், விதை நெல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,22:54 IST

கருத்தை பதிவு செய்ய

வேளாண்மை விரிவாக்க மைய கட்டடம் பழுதடைந்துள்ளதால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதை நெல், உரம் போன்றவை மழையில் நனைந்து விடுகிறது. இக்கட்டடத்தை சீரமைக்க சின்னநாகபூண்டி பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.ஆர்.கே.பேட்டை பி.டி.ஓ., அலுவலக வளாகத்தில் வேளாண்மை விரிவாக்க அலுவலகம் உள்ளது. இங்குள்ள "டிப்போ'வில் இருந்து அப்பகுதி விவசாயிகளுக்கு தேவையான விதை நெல், ஜிப்சம், ஜிங் சல்பேட், ரைசோபியம் போன்ற உரங்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.இது தவிர அதே

ஒன்றியத்தைச் சேர்ந்த சகஸ்ரபத்மாபுரம், சின்னநாகபூடி, கோபாலபுரம், திருநாதராஜபுரம், வெடியங்காடு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் வசதிக்காக சின்னநாகபூடி கிராமத்தில் துணை வேளாண்மை விரிவாக்க மையம் செயல்படுகிறது.இம்மையம் செயல்படும் கட்டடம், 40 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. தற்போது பழுதடைந்து மேற்கூரையில் உள்ள சிமென்ட் காரைகள் பெயர்ந்து காணப்படுகிறது. இதனால், மழைக் காலத்தில் கட்டடத்தின் உட்பகுதியில் மழை நீர் வடிகிறது.இதில் அங்குள்ள விதை நெல், உரம் போன்றவை மழை நீரில் நனைந்து விடுகிறது. இதனால் விதைநெல் முளைத்து விடுவதால், விவசாயிகளுக்கு வேளாண்மை துறை அதிகாரிகளால் வழங்க முடிவதில்லை.இதனால் சின்னநாகபூடி பகுதி விவசாயிகள், தங்களுக்கு வேண்டிய விதை நெல், உரம் போன்றவற்றை பெற ஆர்.கே.பேட்டைக்கு செல்ல வேண்டியுள்ளது. இந்த கட்டடத்தை பழுது பார்க்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள், பலமுறை வேளாண்மைத் துறை அதிகாரிகளிடம் எடுத்து கூறியும், அவர்கள் கண்டு கொள்ளவில்லை என கூறுகின்றனர்.இதுகுறித்து ஆர்.கே. பேட்டை வேளாண்மை விரிவாக்க அலுவலர் பிரதாப்ராவ் கூறும்போது, ""பழுதடைந்த வேளாண்மை விரிவாக்க கட்டடத்தில் அவ்வப்போது தேவையான விதை நெல், உரம் ஆகியவற்றை ஆர்.கே. பேட்டை டிப்போவில் இருந்து எடுத்து சென்று, தற்போது விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம்.அரசு கட்டடங்களை பராமரிப்பது பொதுப்பணித் துறை என்பதால் அவர்களிடம் அக்கட்டடத்தை சீரமைக்க வேண்டும் என, துறை ரீதியாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களும் அதற்கான மதிப்பீடு தயாரித்துள்ளனர். ஒரு சில மாதங்களில் கட்டடம் பழுது பார்க்கப்படும் என எதிர்பார்க்கிறோம்," என்றார்.

**கறவை மாடுகள் பாதுகாப்பு முறைகள் : கலெக்டர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,22:07 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் : கனமழை மற்றும் தொடர்மழை நாட்களில் கறவை மாடுகளை நோய்களிலிருந்து பாதுகாக்க வேண்டுமென கலெக்டர் அறிவுரை வழங்கியுள்ளார். இது குறித்து கலெக்டர் மணிமேகலை விடுத்துள்ள செய்திக் குறிப்பு: மழை நாட்களில் மாடுகளை மழையில் நனையாமல் தொழுவத்தில் கட்ட வேண்டும். தொழுவத்தின் நான்கு புறமும் சாரல் அடிக்காமலிருக்க பாலித்தீன் சாக்குகளால் மூடி வைக்க வேண்டும். மாடுகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி தடுப்பூசி போட வேண்டும். மழை மற்றும் வெள்ளத் தால் மாடு அல்லது கன்று இறந்தால் அருகில் உள்ள கால்நடை மருத்துவர் மற்றும் வி.ஏ.ஓ.,விடம் தகவல் தெரிவிக்க வேண்டும். மத்திய, மாநில அரசின் கால்நடை காப்புத்திட்டத்தின் கீழ் மாடுகளை 50 சதவீத பிரிமிய மானியத்தில் காப்பீடு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் செய்தி குறிப்பில் கூறியுள்ளார்.

**தொடர் மழை; விவசாயம் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,23:38 IST

கருத்தை பதிவு செய்ய

பல்லடம் : பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. தக்காளி, வெங்காயம், புடலங்காய், வெண்டைக்காய், மிளகாய், பீட்ரூட், பாகல், காலிபிளவர், பொறியல் தட்டை அதிகம் சாகுபடி செய்யப்படுகின்றன. வட்டாரங்களில் கடந்த இரண்டு வாரங்களாக பெய்து வரும் மழையில் விவசாய பூமிகளில் தண்ணீர் தேங்கி நிலம் சகதி போல் உள்ளன. மழைநீரில் மூழ்கி பீட்ரூட், தக்காளி, வெங்காயம் செடிகள் அழுகி காய்ப்புத்தன்மையை வெகுவாக குறைத்துள்ளன. இதன்காரணமாக விவசாய பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாய கூலி வேலை வாய்ப்பும் தற்காலிகமாக குறைந்துள் ளன. நான்கு நாட்கள் தொடர்ந்து வெயில் அடித்தால் விவசாய நிலம் காய்ந்து விடும். இதையடுத்து, தரிசு நிலங்களில் உழவு செய்து புதிதாக பயிர்சாகுபடியும், பயிர் சாகுபடி செய்துள்ள பூமிகளில் உரமும் இடப்படும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும் : "சைமா' வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,23:37 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : விவசாயிகள் மற்றும் ஜவுளித்துறையினர் நலன்கருதி, பருத்தி ஏற்றுமதிக்கு உடனடியாக தடைவிதிக்க வேண்டும் என, சைமா சங்கம் மத்திய அரசை வலியுறுத்தி உள்ளது. தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர்கள்(சைமா) சங்க தலைவர் ஈஸ்வரன், மத்திய விவசாயத்துறை அமைச்சர் சரத்பவாருக்கு அனுப்பியுள்ள கடிதம்: கடந்த இரண்டு ஆண்டுகளாக, அனைத்து மூலப்பொருட்கள் விலையும் மேலும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த விவசாயத்துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண் டும். பஞ்சு ஏற்றுமதி செய்வதால், நாட்டில் உள்ள கோடிக்கணக்கான ஜவுளி தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். பஞ்சு விலை உயர்வதால், ஜின்னிங் மில்கள், நூற்பாலைகள், விசைத்தறிகள், கைத்தறி, நிட்டிங் மற்றும் பின்னலாடை, ஆயத்த ஆடை உற்பத்தியாளர்கள் பாதிக் கப்படுகின்றனர்.

விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைப்பதற்காக, பருத்தி ஏற்று மதிக்கு அனுமதி என்று கூறுவதற்கு பதிலாக, கட்டுப்படியான விலையை அரசே நிர்ணயம் செய்து கொடுக்கலாம். அவ்வாறு செய்யும்போது, உள்நாட்டு தேவைக்கான பஞ்சு சீரான விலையில் தட்டுப்பாடின்றி கிடைக்கும். உள்நாட்டு தேவை போக, மீதி பஞ்சை ஜன., மாதத்துக்கு பிறகு, ஏற்றுமதி செய்ய

அனுமதிக்கலாம். பருத்தி ஏற்றுமதியை கட்டுப்படுத்தும் போது நூற்பாலைகள், நிட்டிங் பனியன், பவர்லூம், கைத்தறி தொழில் சீராக நடக்கும்; தொழிலாளர் குடும் பங்களும் காப்பாற்றப்படும். ஜவுளித்துறையிலும் வளர்ச்சி ஏற்பட வாய்ப்பாக அமையும். விவசாயிகள் மற்றும் ஜவுளித்துறையை சேர்ந்தவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க, உடனடியாக பருத்தி ஏற்றுமதிக்கு தடைவிதித்து, பனியன் தொழிலையும், தொழிலாளர் களையும் காப்பாற்ற வேண்டும் என, தெரிவித்துள்ளார்.

**உரத்துக்குச் செல்லும் அழுகிய காய்கறிகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,23:37 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : மழைநீர் புகுந்து, இருப்பு வைத்திருந்த காய்கறிகள் அழுகியதால், அவற்றை அப்புறப்படுத்தும் பணியில் வியாபாரிகள் ஈடுபட்டனர்; வெளிமாநிலங்களில் இருந்து காய்கறி ஏற்றி வந்த லாரிகள், வேறு மாவட்டங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டன. கொட்டி தீர்த்த மழையால், திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் உள்ள காய்கறி மொத்த வியாபார கடைகளில் தண்ணீர் புகுந்து காய்கறிகள்மூழ்கின. கடந்த 6ம் தேதி இரவு துவங்கிய மழை, மறுநாள் அதிகாலை வரை நீடித்ததால், மீட்புப்பணிகள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது; மார்க்கெட் வர்த்தகம் முடங்கியது.

மழை ஓய்ந்து, திருப்பூரில் வெயில் அடிக்கத்துவங்கியுள்ளது. இதையடுத்து, மழையால் பாதித்த பகுதிகளை சீரமைக்கும் பணியில் வியாபாரிகள்ஈடுபட்டனர். மழைநீரில் மூழ்கி அழுகியகாய்கறிகள் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டன. சேறும், சகதியுமான கடைகளை கழுவி, மணல் கொட்டி நிரப்பும் பணிகள் நடந்தன. வெளிமாநிலங்களில் இருந்து காய்கறி கொண்டு வந்த லாரிகள், மதுரை, திருச்சி மாவட்டங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டன. மழை இல்லாததால், காய்கறி சில்லரை வர்த்தகம் இயல்பு நிலைக்கு திரும்பியது. வெங்காய வியாபாரிகள் கூறியதாவது: கடைகளுக்குள் மழைநீர் புகுந்து இருப்பு வைத்திருந்த வெங்காயம், பூண்டு உள்ளிட்ட காய்கறிகள் ஆயிரம் மூட்டைக்கு மேல் அழுகிவிட்டன. கழிவுகளை அகற்றினால் மட்டுமே வர்த்தகத்தை மீண்டும் துவக்க முடியும் என்பதால், அழுகிய காய்கறிகளை டெம்போக்களில் ஏற்றி, பல்லடம், பொங்கலூர் பகுதி விவசாய நிலங்களுக்கு உரமாக அனுப்பி வருகிறோம்.கடைகளுக்குள் தேங்கியுள்ள சேறு, சகதிகளை சுத்தம் செய்து வருகிறோம். புதிய காய்கறிகளை வைக்க இடம் இல்லாததால், வெளிமாநிலங்களில் இருந்து காய்கறி கொண்டுவந்த லாரிகளை, தென்மாவட்ட மார்க்கெட்களுக்கு அனுப்பி வருகிறோம். கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் இருந்து வெங்காயம் அனுப்பும் வியாபாரிகளிடமும், சீரமைப்பு பணி முடியும் வரை காய்கறிகள் அனுப்ப வேண்டாம் என்று கூறியுள்ளோம், என்றார்.

**மழையால் வரத்து இல்லைஎகிறும் கொத்து மல்லி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,23:36 IST

கருத்தை பதிவு செய்ய

பழநி : மழையால் பழநியில் காய்கறி வரத்து பாதித்துள்ளது. ஒரு கிலோ மல்லித் தழை, 100 ரூபாய்க்கு விற்கிறது. இங்கு சில நாட்களாக காய்கறி விலை அதிகரித்து வருகிறது. உழவர் சந்தையில் கிலோ 40 ரூபாய்க்கு விற்ற மல்லி, வெகுவாக உயர்ந்துள்ளது. கத்தரி, தக்காளி, அவரை உள்ளிட்ட காய்கறிகளின் விலையும், கிலோவிற்கு, இரண்டு ரூபாய் முதல் 15 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.உழவர் சந்தை நிலவரம் (கிலோ):தக்காளி- 26, அவரை- 30, ப.மிளகாய்- 20, முள்ளங்கி- 10, வெங்காயம்- 26, பெல்லாரி- 18, முருங்கை- 26, மாங்காய்- 24, கத்தரி, வெண்டை, புடலை, பீர்க்கங்காய், பாகற்காய்- 12 ரூபாய்

**மண்பரிசோதனை முறை விவசாயத்துறை ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,23:53 IST

கருத்தை பதிவு செய்ய

பெரியகுளம் : பெரியகுளம் பகுதியில் மண்பரிசோதனை மற்றும் மண்மாதிரிகள் சேகரிக்கும் முறை குறித்து விவசாத்துறையினர் ஆலோசனை கூறியுள்ளனர்.பெரியகுளம் பகுதியில் நெல், கரும்பு, வாழை உட்பட பலதரப்பட்ட பயிர்கள் விவசாயம் செய்யப்படுகின்றன. பெரியகுளம் பகுதியில் மண்ணின் பாகுபாடு நன்செய் நிலங்களில் செம்மண்ணுடன் மணல் கலந்த வளமான மண் பாங்குடைய மண்ணாகவும், மானாவாரி நிலங்களில் மணற்பாங்குடைய செவ்வல் நிலங்களாகவும் உள்ளது.மண்ணில் சத்துக்கள் இருப்பதை அறியவும், பயிருக்கு உரமிட தேவையின் அளவு குறித்து கணக்கிடுவதற்கு மண்பரிசோதனை செய்வது அவசியம்.நிலங்களில் பயிரிடாத காலங்களிலும், உரமிடாத காலங்களிலும் தான் மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். நிலத்தில் நான்கு முனைகள் மற்றும் மையப்பகுதிகள் உள்பட ஐந்து இடங்களில் மண் எடுக்க வேண்டும்.மண்பரிசோதனை நிலையங்களுக்கு உரிய காலத்தில் அனுப்பி பரிசோதனை முடிவுகளை தெரிந்து கொள்ளலாம். அதன் பின் மண்ணின் தன்மைக்கேற்ப பயிர் ரகத்தேர்வு செய்யலாம். இதனால் பயிர் விளைச்சல் அதிகரிக்கும் என விவசாயத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது

**தேனி மாவட்ட விவசாயிகள் ஒரே உரத்திற்கு மூன்று விலை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,23:53 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி : ஒரே கம்பெனி உரத்திற்கு மூன்று வகையான விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் குழப்பமடைந்துள்ளனர்.தேனி மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் பாக்டம்பாஸ் உரத்திற்கு 50 கிலோ மூடை 535 ரூபாய், 625 ரூபாய், 735 ரூபாய் என மூன்று வகையான விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் எந்த உரம் தரமானது என்பது தெரியாமல் குழம்பி தவிக்கின்றனர்.விவசாய இணை இயக்குனர் இமாமுதீனிடம் கேட்ட போது, "ஒவ்வொரு

கம்பெனியும் வெவ்வேறு வகைகளில் சத்து கலந்த உரங்களை தயாரிக்கின்றனர். உரத்தில் உள்ள சத்துக்களின் அளவுக்கு ஏற்ற வகையில் விலை நிர்ணயம் செய்கின்றனர். விலை நிலவரத்தை பொறுத்தவரை மத்திய அரசு மட்டுமே கட்டுப்படுத்த முடியும். நாங்கள் மூடைகளில் குறிக்கப்பட்டுள்ள விலைக்கு உரங்களை விற்பனை செய்கின்றனரா என்பதை கண்காணித்து வருகிறோம்,' என்றார்

**கரும்பு விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,22:04 IST

கருத்தை பதிவு செய்ய

திருவெண்ணெய்நல்லூர் : பெரியசெவலை செங்கல்வராயன் ஆலையில் கரும்பு விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளின் ஆலோ சனைக் கூட்டம் நடந்தது. ஆலையின் ஆட்சியர் கலைராஜன் தலைமை தாங்கினார். தலைமை கரும்பு அலுவலர் பாண்டியன் முன்னிலை வகித்தார். ஆலையில் கரும்பு அரவை குறித்து விவசாயிகளிடம் கலந்தாய்வு நடத்தப்பட்டது. கரும்பு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்க வேண்டும், பழுதடைந்த சாலைகளை சரி செய்ய வேண்டும். கடன் தொகையாக 30 ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தினர்.

## விவசாயம் பாதிக்காமல் இருக்க உரம் தட்டுப்பாடு இன்றி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் டாக்டர் கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பேட்டி

*கோவை, நவ.10–*

*தமிழ் நாட்டில் விவசாயம் பாதிக்காமல் இருக்க உரம் தட்டுப்பாடு இன்றி கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதிய தமிழகம் கட்சியின் நிறுவனத்தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. கூறினார்.*

*பரமகுடி துப்பாக்கி சூடு*

*கோவையில் புதிய தமிழகம் கட்சியின் நிறுவனத்தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. நிருபர்களிடம் நேற்று கூறியதாவது;–*

*ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் 6 பேரும்,*

அதை தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களில் 3 பேரும் ஆக 9 பேர் பலியாகி உள்ளனர். இதற்கு காரணமான போலீஸ் அதிகாரிகளை சஸ்பெண்டு செய்ய வேண்டும். இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம் இழப்பீடு தொகை வழங்க வேண்டும். அவர்களுக்கு அரசு வேலையும் கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துவருகிறோம். ஆனால் தமிழக அரசு இதுவரை செவிசாய்க்கவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள 18 சதவீத இடஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கு 3 சதவீத உள்இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதனால் தாழ்த்தப்பட்டோர் பாதிக்கப்படுகிறார்கள். எனவே 3 சதவீத உள் இடஒதுக்கீட்டை ரத்து செய்ய வேண்டும்.

போராட்டம்

தியாகி இம்மானுவேல் நினைவுநாளை அரசு விடுமுறை நாளாக அறிவித்து அரசு விழாவாக கொண்டாட வேண்டும். மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டிசம்பர் மாதம் 6–ந் தேதி முதல் தொடர் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம். முதல் கட்டமாக சென்னையில் டிசம்பர் 6–ந் தேதி உண்ணாவிரதம் நடைபெறும். 2–வது கட்டமாக சாலை மறியல், சிறை நிரப்பும் போராட்டம், நடத்துவோம். மக்கள் நல பணியாளர்கள் 15 ஆயிரம் பேர் நீக்கப்பட்டதால் அவர்களது குடும்பம் நடுத்தெருவுக்கு வரும் சூழல் உள்ளது. அரசு ஊழியர்கள் நியமனத்தில் அரசியல் தலையீடு கூடாது. தமிழ்நாட்டில் விவசாயம் நாளுக்குநாள் நலிவடைந்து வருகிறது. கடந்த 2006 முதல் 2011 வரை பெரும்பாலான விவசாய நிலங்கள் ரியல் எஸ்டேட்டாகவும், பன்னாட்டு கம்பெனிகள் கையிலும் சென்று விட்டன. அவர்கள் அந்த இடத்தை சுற்றி வேலி போட்டு விட்டனர். இதனால் தானிய உற்பத்தி குறைந்து வருகிறது. இது பற்றி அரசு எந்த அக்கரையும் கொள்ளவில்லை.

உரம் தட்டுப்பாடு

விவசாயிகளும் தங்களது வாழ்வாதாரத்தை படிப்படியாக இழந்து வருகிறார்கள். விவசாயத்தை மேம்படுத்த இந்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. கடந்த 3 மாதங்களாக பொட்டாஷ் உரம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உரத்தின் விலை தாறுமாறாக உயர்ந்து விட்டது. விவசாயம், விவசாயிகளின் நலன் கருதி கூட்டுறவு சங்கங்களில் உரம் விற்பனை செய்ய வேண்டும். உரம் தட்டுப்பாடு இன்றி கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு டாக்டர் கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.கூறினார்.

பேட்டியின் போது மாநகர அமைப்பாளர் நக்கீரன் மற்றும் முருகானந்தம் ஆகியோர் உடன் இருந்தனர்.

தொடர் மழையின் காரணமாக

# தக்காளி விலை கிடு, கிடு உயர்வு

ஊட்டி, நவ.10–

தொடர் மழையின் காரணமாக ஊட்டியில் தக்காளி விலை கிடு, கிடு என உயர்ந்து வருகிறது.

## ஏற்றுமதி

நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், முட்டைகோஸ், காளி பிளவர், பட்டாணி, மேரக்காய் போன்ற மலை தோட்ட காய்கறிகள் பயிரிடப்படுகிறது. அறுவடை செய்யப் படும் காய்கறிகள் ஊட்டி, மேட்டுப் பாளையம் காய்கறி மண்டிகளுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப் படுகிறது. அங்கிருந்துவெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அதே நேரத்தில் வெங்காயம், தக்காளி, முருங்கைக்காய், வாழைக்காய், கருவேப்பிலை, கத்திரிக்காய் போன்றவை சமவெளி பகுதிகளில் இருந்து மலை மாவட்டமான நீலகிரிக்கு கொண்டு வரப் படுகிறது.

## தக்காளி விலை கிடு, கிடு உயர்வு

கடந்தசில நாட்களாக நீலகிரி மாவட்டத்தை விட சமவெளி பகுதிகளில் பலத்த மழை பெய்தது. மழையினால் காய்கறி செடிகள் வெள்ளத்தில் மூழ்கின. இதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டது. காய்கறி வரத்து குறைந்தது. ஊட்டி மார்க்கெட்டுக்கு வரும் தக்காளி வரத்து குறைந்தது. இதனால் தக்காளியின் விலை கிடு, கிடு என உயர்ந்துள்ளது. கடந்த சில மாதங்களுக் முன்பு ஒரு கிலோ தக்காளி ரூ.5 க்கு விற்கப்பட்டது. தற்போது ரூ.36 வரை எட்டிவிட்டது. ஊட்டி மார்க்கெட்டில் நேற்று ஒரு சில கடைகளில் ஒரு கிலோ தக்காளி ரூ.40க்கும், பெரும் பாலான கடைகளில் ரூ.36க்கும் விற்பனை செய்யப் பட்டது. அதே நேரத்தில் ஊட்டி உழவர் சந்தையில் ஒரு கிலோ தக்காளி ரூ.32 முதல் ரூ.34 வரை விற்பனை செய்யப்பட்டது.



## விலை குறைய வாய்ப்பு

இது குறித்து வியாபாரி ஒருவர் கூறும் போது, சமவெளி பகுதியில் பெய்த மழையின் காரணமாக தக்காளி வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் விலையும் ஏறியது. கடந்த 2 நாட்களாக மழை விட்டு வெயில் அடிக்கிறது. இதன் காரணமாக தக்காளி வரத்து அதிகரிக்கும் என்று எதிர்பார்த்து உள் ளோம். அவ்வாறு அதிகரிக்கும் பட்சத்தில் தக்காளியின் விலை குறைய வாய்ப்புகள் உள்ளது என்று கூறினார்.

# வேளாண்மை செய்திகள்

# வெள்ளரி செடியில் மேற்கொள்ள வேண்டிய பயிர் பாதுகாப்பு முறைகள்

பொதுவாக வெள்ளரி செடியை களிமண், மணல் கலந்த வண்டல் மண் நிலங்களில் சாகுபடி செய்யலாம். மிதமான வெப்பமும், காற்றில் அதிக ஈரப்பதமும் இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். மேலும் மகசூலுக்கு மண்ணின் கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 வரை இருக்க வேண்டும்.

### பருவம்

கோடை காலத்தில் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களிலும் மற்றும் மழைக்காலங்களிலும் வெள்ளரியை பயிர் செய்யலாம். இதற்காக நிலத்தை நன்கு உழுது 60 செண்டிமீட்டர் அகலத்தில் 1.50 மீட்டர் இடைவெளியில் வாய்க்கால் அமைத்து பயிர் செய்ய வேண்டும். இதன் இரண்டு புறமும் 45 செண்டிமீட்டர் நீளம், அகலம், ஆழம் கொண்ட குழிகள் எடுக்க வேண்டும். அதன் பின்னர் குழிகளில் மண்ணுடன் 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

### விதையும் விதைப்பும்

ஒரு எக்டேருக்கு 2.5 கிலோ விதை தேவைப்படும். இந்த விதைக்கு டைக்கோடெர்மா விரிடி 4 கிராம் அல்லது சுடோமோனாஸ் புளோரசன்ஸ் அல்லது 2 கிராம் கேப்டான் மருந்து கலந்து நேர்த்தி செய்து, குழிக்கு 4 முதல் 5 விதைகளை விதைத்து நன்றாக முளைக்கும் வரை நீர் ஊற்ற வேண்டும். விதைகள் நன்கு முளைத்த பின் குழியில் அதனுடன் வளரும் 2 அல்லது 3 செடிகளை வைத்து விட்டு மீதி செடிகளை களைந்து அப்புறப்படுத்தி விட வேண்டும்.

விதைகள் விதைத்த 3-ம் நாள் உயிர் தண்ணீர் விட வேண்டும். மேலும் முளைத்தவுடன் ஒரு தண்ணீரும், அதன் பிறகு வாரம் ஒரு முறை வாய்க்கால் வழியாக தண்ணீர் விட வேண்டும். இந்த வெள்ளரி செடிகளை விதைத்த 25-ம் நாளும், அதன் பிறகு ஒரு மாத இடைவெளியிலும் களை நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்.

### வளர்ச்சி ஊக்கி

விதைத்த 30 ஆம் நாளில் செடிகளை கொத்திவிட்டு மேல் உரமாக ஒவ்வொரு குழிக்கும் 50 கிராம் யூரியாவை இட்டு நீர் பாய்ச்ச வேண்டும். செடிகளில் பெண் பூச்சிகள் விரைவில் உற்பத்தி ஆகவும், பெண் பூச்சிகளின் எண்ணிக்கையை அதிகரித்து விளைச்சலை அதிகரிக்கவும் 'எத்ரல்' என்ற வளர்ச்சி ஊக்கியை 10 லிட்டர் நீரில் 2.5 மில்லி என்ற அளவில் கலந்து விதைத்த 15-ம் நாளில் இருந்து வாரம் ஒரு முறை தெளிக்க வேண்டும்.

இதே போல் வெள்ளரிக் காய் திரண்டு வரும் போது பழ ஈக்கள் மற்றும் வண்டுகளின் தாக்குதல் அதிகம் இருக்கும். இதை கட்டுப்படுத்த மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

### சாம்பல் நோய்

இதே போல் செடி மற்றும் காய்களில் காணப்படும் சாம்பல் நோயை கட்டுப்படுத்த கார்பெண்டாசிம் மருந்தை 0.1 சதம் தெளிக்க வேண்டும். விதைத்த 45 நாட்கள் கழித்து காய்களை அறுவடை செய்யலாம்.

இதன் வாயிலாக எக்டேருக்கு 90 நாட்களில் 8 முதல் 10 டன்கள் வரை நன்கு திரண்ட காய்கள் கிடைக்கும்.

தகவல்:- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோவை.

# நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட புதிய ரக கோதுமை



தமிழ்நாட்டில் பரவலாக நீண்டகாலமாக கோதுமைப்பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மலைப்பிரதேசங்களில் ஆண்டு முழுவதும், மலை சார்ந்த சமவெளி பகுதிகளில் குளிர்காலத்திலும் பயிரிடப்படுகிறது. தீவிர பயிர் சாகுபடியால் சிறுதானிய பயிர்களின் சாகுபடி குறைந்து வரும் நிலையில் நகரம் முதல் கிராம் வரை கோதுமையின் தேவை மட்டும் அதிகரித்து கொண்டுதான் வருகிறது.

### புதிய ரக கோதுமை

அரிசிக்கு இணையாக கோதுமை வடமாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் கொண்டுவரப்படுகின்றன. தமிழ்நாட்டில் உடுமலையில் சம்பா கோதுமை சாகுபடி செய்யப்படுகிறது. மேற்கு தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகள் கோதுமை சாகுபடி செய்ய ஏற்றது என்றாலும், பயிர்களை தாக்கும் வேர் அழுகல், துரு நோய் போன்ற பிரச்சினைகளை தாங்கி வளரும் கோதுமை ரகங்கள் அறிமுகப்படுத்தப்படாததால் சாகுபடி குறைந்து உள்ளது.

கோவை-1, கோவை-2. எச்.டி-2833 என்ற புதிய கோதுமை ரகங்கள் வேர் அழுகல், துருநோய் தாக்குதலை தாங்கி வளரும் தன்மை கொண்டவை. நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவை. கோவை-1 ரகம் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் சாகுபடி செய்ய ஏற்றது. ஏக்கருக்கு 25 முதல் 50 குவிண்டால் வரை மகசூல் தர வல்லது.

### சாகுபடி முறைகள்

கோவை-2 ரகம் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் பயிரிட ஏற்றது. ஒரு ஏக்கருக்கு 40 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கும். கோவை மாவட்டத்தை பொறுத்தவரை குளிர்காலமான நவம்பர்-டிசம்பர் மாதங்களில் சாகுபடி செய்ய ஏற்றது. காலம் தாழ்த்தி சாகுபடி செய்தால் கோதுமை மணிகள் முற்றுவதற்கு தாமதம் ஆகி விளைச்சலை குறைத்து விடும்.

இந்த புதிய ரக கோதுமைப்பயிர்களை சாகுபடி செய்வதற்கு முன், நிலத்தை நன்கு உழுது பக்குவப்படுத்தி, கடைசி உழவின் போது அடியுரம் இட்டு நிலத்தை சமன்படுத்த வேண்டும். பின்னர் வரிக்கு 24 செ.மீ. இடைவெளியில் தொடர்ந்து விதைக்கவேண்டும். பின்னர் களை கொத்தின் உதவியுடன் விதைகள் முழுமையாக மூடும்படி மண்ணை பரப்பி நீர் பாசனம் செய்ய வேண்டும்.

### உரமிடுதலும்-நீர்ப்பாசனமும்

விதைக்கும் போது நிலத்தில் மழை ஈரம் இருப்பின் விதைகள் முளைக்கும் வரை நீர்ப்பாசனம் செய்ய தேவையில்லை. ஒரு ஏக்கருக்கு நடவு செய்ய 40 கிலோ தேவைப்படும். ஏக்கருக்கு 40 கிலோ தழைச்சத்து, 24 கிலோ மணிச்சத்து, 16 கிலோ சாம்பல் சத்தை பயன்படுத்தினால் மகசூலை அதிகரிக்கலாம்.

கோதுமைக்கு 5 முறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். விதைத்தவுடன், 15 நாட்கள் கழித்தும், தூர்விடும் பருவத்திலும், கதிர்விடும் பருவம், மணி முற்றும் பருவம் ஆகிய பருவங்களில் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். 25-30, 45-50, 70-75 ஆகிய நாட்களில் களை எடுத்தல் அவசியம். பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இருக்காது. பறவைகளிடம் இருந்து கோதுமையை பாதுகாக்க வேண்டும்.

### அறுவடை-மகசூல்

நெல் மணிகள் நன்றாக வளர்ந்த நிலையில், நிலத்தில் போதுமான ஈரப்பதம் இருப்பின் முதிர்ந்த தாளை வேரோடு பிடுங்கி அறுவடை செய்யலாம். மண் வறண்டு இருந்தால் நெல்லைப்போல் அறுவடை செய்து, கதிர் அடிக்கும் எந்திரத்தில் போட்டு, கோதுமை மணிகளை பிரித்து எடுக்கலாம். கோதுமைப்பயிரை நன்கு கவனித்து பராமரித்து இருந்தால் ஒரு ஏக்கருக்கு 20 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கும்.

-தகவல்: ஜெகதீஷ்குமார், சிவசாமி, ஜெயப்பிரகாஷ், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவன மண்டல நிலையம், வெல்லிங்டன்-நீலகிரி.

## வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு

# செயற்கை முறையில் கருவூட்டுவது எப்படி?

நாட்டில் தொன்று தொட்டு பின்பற்றப்பட்டு வரும் தொழில்களில் ஒன்று வெள்ளாடு வளர்ப்பு. வீடுகளில் முதன்முதலில் வளர்க்கப்பட்ட விலங்கு வெள்ளாடுகள். வெள்ளாடு வளர்ப்பதன் மூலம் நமக்கு தேவையான பால், இறைச்சி, விவசாயத்திற்கு தேவையான எரு ஆகியவற்றை பெற்று கொள்ளலாம்.

### வெள்ளாடு வளர்ப்பு

சிறு விவசாயிகள், ஏழை விவசாயிகள், பெண்கள் என அனைத்து தரப்பு மக்களுமே வெள்ளாடு வளர்ப்பதை சுய தொழிலாக செய்வதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். வெள்ளாடு வளர்ப்பு மக்களுக்கு நிரந்தர வருமானத்தை தரும் தொழில் ஆகும். கிராமங்களில் வசிக்கும் 40 சதவீத மக்கள் வெள்ளாடுகளை வளர்த்து, அதில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் இருந்தே பிழைப்பு நடத்தி வருகிறார்கள்.

நம் நாட்டின் தட்ப வெட்ப நிலையில் வளர்ந்த ஆடுகள் இனப்பெருக்கத்திலும் சிறந்தவையாக இருந்தபோதிலும், பால் உற்பத்தி குறைவாகவே உள்ளது. இதனால் பசு மற்றும் எருமை மாடுகளுக்கு செயற்கை முறையில் கருவூட்டி, இனப்பெருக்கம் செய்து பால் உற்பத்தியை பெருக்குவது போல் வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கு செயற்கை கருவூட்டல் செய்யப்பட்டு வருகின்றன.

### செயற்கை முறை கருவூட்டல்

செயற்கை முறையில் கருவூட்டல் என்பது நல்ல தரமான உயர்ரக பொலிகிடாக்களில் பெறப்பட்ட ஆண் உயிரணுக்களை செயற்கை முறையில், பெண் ஆடுகளின் இனப்பெருக்க குழாயில் செலுத்துவது ஆகும். நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக்கல்லூரியில் கடந்த 2009-ம் ஆண்டு முதல் இந்த முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

இந்த முறையால் நல்ல உயர்ரக ஆடுகளின் அதிக பால் உற்பத்தி, விரைவான உடல் எடை வளர்ச்சி போன்றவற்றை நாட்டு ஆடுகளுக்கு புகுத்த முடியும். ஆட்டு குட்டிகள் மரபு வழி ஆய்வுகளுக்கு உறுதுணையாக இருக்கும். பொலி கிடாக்களில் இருந்து ஆண் உயிரணுக்களை சேகரித்து, பெண் ஆடுகளுக்கு சினை ஊசி போடுவதால், பொலி கிடாக்களின் இனப்பெருக்க திறன் பாதுகாக்கப்படுகிறது.

### என்னென்ன பயன்கள்?

வெள்ளாடு வளர்ப்போர் செயற்கை முறை கருவூட்ட பொலி கிடாக்களை வளர்க்க தேவையில்லை என்பதால், பொலி கிடாக்களுக்கான பராமரிப்பு செலவு, தீவன செலவுகள் மிச்சமாகிறது. அரிய வகை ஆட்டு இனங்களை பாதுகாக்க முடியும். பண்ணைகளில் செயற்கை கருவூட்டல் முறை பின்பற்றப்பட்டால் பண்ணை பதிவேடுகளை பராமரிக்கப்பட வேண்டியுள்ளது.

இதன்மூலம் இனப்பெருக்கம் செய்ய தகுதியில்லாத ஆடுகளை அடையாளம் காண முடியும். செயற்கை கருவூட்டல் முறையில் குறுகிய காலத்தில் அதிக ஆடுகளை இனப்பெருக்கம் செய்ய முடியும் என்பதால் விவசாயிகள் வருமானம் உயரும். வெள்ளாடு வளர்ப்பவர்கள் இந்த முறையை பின்பற்றுவதால் உயர்ரக இன ஆட்டு குட்டிகளை பெறுவதன் மூலம் பண்ணையின் பொருளாதாரத்தை உயர்த்தி கொள்ளலாம்.

-தகவல்: கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்.